நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.
A/L 87 மீட்டல் வகுப்பு
தாவரவியல்: குணசீலன்
விலங்கியல்: இளங்கோ
பௌதிகம்; பத்மநாதன்
இரசாயனம்: சிவசோதி
தூய-பிரயோக கணிதம்:
திரு A.B.A. ஜெயம்
ஆரம்பம் 05-01-87

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.
சகல மாணவர்களுக்கும்
எமது
புது வருட வாழ்த்துக்கள்
87ஆம் ஆண்டுக்கான
O/L, 6, 7, 8, 9ஆம்
வகுப்புகள்
ஆரம்பம்: 5 - 01 - 87
பிற்பகல்: 3-60 மணி

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மார்கழி மீ 15 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 27 (30-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 29

★ நத்தார் யுத்த நிறுத்தத்தின் பின்... நேற்று...

# பரந்தனில் கடும் போர்

# சிப்பாய்களும் புலிகளும்

## பலியானோர் எண்ணிக்கை: இராணுவம் - 5; மக்கள் - 6

### போராளிகள் 2 பேர் வீர மரணம்

யாழ்ப்பாணம், டிச. 30

நத்தார் தினத்தன்று யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்ட பின்னர், நேற்றைய தினம் பரந்தனில் இராணுவச் சிப்பாய்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் இடையில் கடும் போர் நடந்தது.

சுமார் ஏழு மணித்தியாலங்கள் இரு சாராரும் மோதிக் கொண்டனர். எனினும் தமது தரப்பில் உயிரிழப்பு அதிகரிக்கவே சிப்பாய்கள் பின்வாங்கிக் கொண்டனர்.

நேற்றைய சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை விவரம் வருமாறு:

இராணுவம்:- ஐந்து பேர் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்ட முந்திய செய்தி. ஆனால் அது எட்டுக்கும் மேற்பட்டிருக்கலாம் என்பது பிந்திய தகவல்.

பொதுமக்கள்:- ஆறு பேர் என்பது முந்திய செய்தி. அது பத்துக்கும் மேற்பட்டிருக்கலாம் என்பது பிந்திக் கிடைத்த தகவல்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீர மரணம் அடைந்தனர்.

கிளிநொச்சியில் இருந்து ஆனையிறவு வந்து, அங்குள்ளவர்களுடன் சேர்ந்து குடாநாட்டுக்குள் நுழைந்து இராணுவ நடவடிக்கையில் இறங்குவதே சிப்பாய்களின் நோக்கமாக இருந்தது என்று புலிகள் தரப்புப் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

காலை சுமார் 5-30 மணியளவில் கிளிநொச்சி முகாமில் இருந்து வெளியேறிய 300க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கவச வண்டிகள், டிரக்குகள் என்று சுமார் 20 வாகனங்களில் வந்தனர். வரும் வழியில் பொதுமக்களை கூட அழைத்து வந்தனர் தமது பாதுகாப்புக்காக.

பரந்தன் பண்ணைக்குச் சமீபமாக வந்ததும் பொதுமக்களைக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருக்க வைத்தனர். சிலரை முழங்காலில் நிற்கச்செய்தனர்.

பரந்தன் பண்ணை அருகே சிப்பாய்கள் பவனியை இடைமறித்த விடுதலைப்புலிகள் உக்கிரமான தாக்குதல் நடத்தினர். இரு சாராருக்கும் இடையில் ஏழு மணித்தியாலங்களுக்கும் மேலாகக் கடும்போர் நடந்தது.

இத்தாக்குதலின் போது புலிகளினால் நவீன ரக ஆயுதங்கள் பாவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 30

நேற்று பரந்தனில் நடைபெற்ற படைகள்-புலிகள் நேரடி மோதலின் போது வீர மரணமடைந்த லெப்ரினன்ட் கிறிஸ்ரி (பேச்சிமுத்து யாழ்ப்பாணம்) ஜக்சன் (ஜெயச்சந்திரன் வதிரி) ஆகியோருக்கு புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (இ-10)

## இயக்கச்சியுடன் வாகனங்கள் திரும்பி வந்தன

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் புறப்பட்ட வாகனங்கள் அனைத்தும் நேற்று இயக்கச்சியுடன் திரும்பி வந்தன.

பரந்தனில் நேற்று நடைபெற்ற புலிகள் — சிப்பாய்கள் சண்டை காரணமாகவே வாகனங்கள் இயக்கச்சியுடன் திரும்பின.

எனினும் மாலை நிலைமை வழமைக்குத் திரும்பியது கொழும்பு மற்றும் இடங்களில் இருந்து சில வாகனங்கள் ஆனையிறவைத் தாண்டி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (இ-10)

## ஆனையிறவிலும் புலிகளுடன் மோதல்!

யாழ்ப்பாணம், டிச. 30

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாக சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிய வருகிறது.

நேற்றுக் காலை 7 மணி அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி வெளியேற முற்பட்டனர்.

முகாமில் இருந்து 50 யார் தூரம் முன்னேறி வந்ததும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்திவிட்டு முகாமுக்குத் திரும்பினர்.

முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (இ-10)

## ஆயுதப்படையில் ஜே. வி. பி. இரகசியக் குழு இயங்குவதாகத் தகவல்!

கொழும்பு, டிச. 30

ஆயுதப்படையினர் மத்தியில் ஜே. வி. பி. இரகசியக் குழு ஒன்று இயங்குகின்றது என்று அரசு உயர்மட்டத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இராணுவத்தினர் பொலீஸார் மத்தியில் ஜே வி பி இரகசியக்குழுவின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்பதே அரசுக்குக் கிடைத்த தகவல்.

இதைத் தொடர்ந்து இதுபற்றி அவசர விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி இரகசியப் பொலீஸ் குழு ஒன்றை மேலிடம் பணித்துள்ளது.

இதனிடையில் அரசியல் எதிரிகளைக் கொலை செய்வதில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் ஜே வி பி குழு ஒன்றைக் கைது செய்வதில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் தயாபதிரான, மகா வித்தியாலய அதிபர் ஆகியோரை இக்குழுவே கொலைசெய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பொலீஸார் தேடுகின்ற தகவலைத் தொடர்ந்து இக்குழுவினர் தலைமறைவாகி விட்டனர் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்குழு உறுப்பினர்கள்பற்றி பொலீஸ் நிலையங்கள், விமான நிலையம் ஆகியவற்றுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளன.

## தமிழ் ஈழ இராணுவம் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச 30

சனிக்கிழமை இரவு பண்ணை வீதியில் தமிழ் ஈழ இராணுவத்தினரின் சிலிண்டர் தாக்குதலில் இரண்டு ஸ்ரீ லங்கா சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று தமிழ் ஈழ இராணுவம் அறிவித்துள்ளது.

மேலும் இருவர் காயமடைந்தனர் என்றும் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## சிப்பாய்கள் சொல்ல பட்டாஸும் வெடிக்கிறது!

மன்னார், டிச 30

பட்டாசுகள்கொளுத்தி புதுவருடத்தைக் கொண்டாடுமாறு மன்னார் மக்களுக்கு சிப்பாய்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனராம்.

இதனை அடுத்து நேற்றில் இருந்தே மன்னாரின் சகல பகுதிகளிலும் ஒரே வெடிச்சத்தமாக இருந்தது.

கடந்த பல வருடங்களின் பின் மன்னாரில் புதுவருடக் கொண்டாட்டங்கள் இப்போதிருந்தே வெகு குதூகலமாகக் கொண்டாடப் படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)

## சென்னையில்ரெலோநடத்தும் உண்ணாவிரதத்தில் மேலும் 25 பேர்

சென்னை. டிச. 30

சென்னை நகரில் ரெலோ போராளிகள் நடத்தும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் மேலும் 25 போராளிகள் நேற்று சேர்ந்துகொண்டனர்.

மொத்தமாக 75 ரெலோ போராளிகள் தற்சமயம் உண்ணாவிரதமிருக்கின்றனர்.

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள ரெலோ போராளிகள் சிலரும் உண்ணாவிரதம் இருக்கின்றனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் இந்திரா காங்கிரஸ் எம். பி. க்களான தங்கபாலு, மோஹன் ஆகியோர் உண்ணாவிரதிகளை சென்று பார்த்தனர்.

உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை புதுடில்லி அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக இவர்கள் உறுதியளித்தனர்.

- கைது செய்யப்பட்ட 108 ரெலோ போராளிகளை விடுதலை செய்யவேண்டும்
- கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், தகவல் தொடர்பு சாதனங்களை திருப்பித்தர வேண்டும்.

இக்கோரிக்கைகளை முன்வைத்தே ரெலோ தலைவர் செல்வம் தலைமையில் இந்த சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. (இ-ஐ-எ)

## சென்னை சிறையில் கருணாநிதி மௌன விரதம்

சென்னை, டிச. 29

பத்து தி மு க. எம், எல். ஏக்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி ஒருநாள் மௌன விரதம் அனுஷ்டித்தார்

சென்னைமத்திய சிறையில் கலைஞரின் மௌன விரதம் இடம் பெற்றது.

இந்தி எதிர்ப்பு நடவடிக்கை காரணமாகதிரு. கருணாநிதி மத்தியசிறையில் காவலில் வைக்கப் பட்டிருக்கிறார் என்பது தெரிந்ததே.

இதனிடையில், பத்து தி மு. க. எம். எல் ஏக்களை பதவி நீக்கம் செய்ததை ஆட்சேபித்து பாண்டிச்சேரி சட்டசபைக்கு முன்னால் மறியல் செய்ய முயன்ற 4 தி மு க எம். எல். ஏக்களும் 200 தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட எம் எல், ஏக்களில் பாண்டிச்சேரி மாநில முன்னாள் முதலமைச்சர் டி. இராமச்சந்திரனும் ஒருவர். (இ-எ)

## புத்தாண்டு போர் நிறுத்தம்: பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

கொழும்பு, டிச. 30

புத்தாண்டு தினத்தன்றும் யுத்த நிறுத்தம் ஒன்றை அனுஷ்டிப்பதைப் பற்றி நேற்று நடந்த தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் நீண்ட நேரம் நேற்று நடந்தது

அரச குழுவின் யாழ் நல்லெண்ண விஜயம் பற்றிய தொடர்பான விஷயங்கள், புத்தாண்டு தினத்தன்று யுத்த நிறுத்தம் ஒன்றை அனுட்டிப்பது பற்றிய சாத்தியம் பற்றி எல்லாம் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

## அகதிகளை ஏற்றி வந்த 3 வள்ளங்களைக் கடற்படையினர் கைப்பற்றினர்

மன்னார், டிச. 30

தமிழ் நாட்டில் இருந்து மூன்று வள்ளங்களில் தலைமன்னார் நோக்கி வந்துகொண்டிருந்த அகதிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

கைதான அனைவரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பின்பு ஆண்களைத்தவிர பெண்கள், குழந்தைகள் மன்னார் அரசாங்க அதிபரிடம் கடற்படையினர் கையளித்தனர்.

ஆண்கள்மீது தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

(4-ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கூழாங்குளம் பகுதி சுற்றி வளைப்பு

### இணக்கசபை உறுப்பினர் கைது

வவுனியா, டிச. 30

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியை சுற்றிவளைத்து சோதனையிட்ட சிப்பாய்கள் இணக்கசபையைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களைக் கைதுசெய்தனர்.

நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து சாஸ்திரி கூழாங்குளம் பகுதிக்கு ரோந்து சென்ற நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் அப்பகுதியை சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

இச் சுற்றிவளைப்பின் போது நூற்றுக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு பாடசாலை ஒன்றில் வைத்து விசாரிக்கப்பட்டனர்.

விசாரணையில் இணக்க சபை உறுப்பினர்கள்என காணப்பட்ட ஐந்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ் போராளிகளில் ஒருவர்மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டார்

சென்னை, டிச 29

சென்னை நீதிமன்றம் ஒன்றினால் பிணையில் செல்ல உத்தரவிடப்பட்ட ஆறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராளிகளில் நிமலன் என்பவர் மட்டுமே 20,000 ரூபா உத்தரவாதப் பிணையில் விடுதலையானார்.

டக்ளஸ் தேவானந்தா உட்பட ஏனைய 5 போராளிகளும் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து விடுதலையாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

ஈ. பி. ஆர். எல். எப். போராளிகள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி என். ரி. வானமாமலை 11ஆவது மேலதிக செஷன்ஸ் நீதிபதி முன் தோன்றி, பிணை மனுக்களைச் சமர்ப்பித்து வாதாடினார்.

அரசு வழக்குத்தொடருநர், பிணையில் 6போராளிகளையும் விடுவிப்பதை வன்மையாக எதிர்த்தார். (இ-எ)

முச்சந்தி முனி



என்ன விதமான மனுஷர் அப்பா! அகதிகளை அழைச்சு வாறதுக்கு எண்டு படகு அனுப்புகினம், பிறகு அங்கை இருந்து வாறவையை கைது செய்யினம்.....! உதுக்குள்ளை ஏதோ உள்குத்திரம் இல்லாமல் இல்லை....!

## முஸ்லிம் பற்றி வெளிநாட்டவர் ஆலோசனை தேவை இல்லை

### அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, டிச 30

இலங்கை முஸ்லிம்களின் வருங்காலம் பற்றி வெளிநாட்டவரின் ஆலோசனை எமக்குத் தேவையில்லை.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி முன்கண்டவாறு சொன்னார்.

'இலங்கை முஸ்லிம்களின் வருங்காலம்'— பற்றி கோட்டை முஸ்லிம் கலாசார மண்டபத்தில் நேற்றுமாலை நடந்த கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் தலைவர் அமரர் சேர் ராசிக் பரீதின் 93 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி இந்தக் கூட்டம் நடந்தது.

அமைச்சர் அத்துலத் முதலி அங்கு மேலும் சொன்னதாவது:

முஸ்லிம் மக்களின்முன் மாதிரியைப் பின்பற்றி சிங்களவரும் தமிழரும் வாழ்ந்து இருந்தால் இன்றைய நெருக்கடி ஏற்பட்டு இருக்காது.

இலங்கை முஸ்லிம்கள் அரேபிய. மலேஷிய வழித் தோன்றல்கள்.

தமிழ்மொழி மாநிலத்தில் வாழ தங்களுக்கு விருப்பமில்லை என்று முஸ்லிம் எம். பிக்கள் கொழும்பு வந்த இணை அமைச்சர்கள் குழுவிடம் நேரடியாகத் தெரிவித்து விட்டனர்.

தனித்தன்மை நிறைந்த இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி ஆலோசனைகளை வழங்க வெளிநாட்டவர்கள்முன் வருகின்றனர். அவர்களின் ஆலோசனை எமக்குத் தேவை இல்லை.

முஸ்லிம்களின் எதிர்காலம் எனது எதிர் காலத்துடன் பிணைந்துள்ளது. சிங்கள மக்களின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

30-12-1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்: 10·59முதல்-12·29வரை

ராகுகாலம்: 3·29 முதல் -4·59 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### விற்பனைக்கு

முரசுமோட்டை பழைய கமத்திலுள்ள இருபோகம் செய்கை பண்ணக்கூடிய, நீர்ப்பாசன வசதியுள்ள 8 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: K. சிவஞானம், புத்தூர் மேற்கு, புத்தூர்.

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'

### தேவை

அனுபவமுள்ள அச்சுக் கோப்பாளர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர எண்:41, பே/பா. உதயன், த.பெ. எண்: 23, யாழ்ப்பாணம்.


## மறியலால் ஓய்வூதியம் தாமதம்

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ் பகுதி மக்கள் வங்கிக்கிளைகள் முன் நடைபெற்று வரும் மறியல் போராட்டம் காரணமாக ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியப் பணத்தைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் வங்கி செயற்படாததன் காரணமாக யாழ் கோட்டை தபால் அலுவலகத்தில் பணம் இல்லையாம்.

இதன் காரணமாக தபால் கந்தோர் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வங்கி நிர்வாகம் செயற்படத்தொடங்கியதும் ஓய்வூதியம் வழங்கப்படும் என தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

மலேரியா தடுப்பு இயக்கத்தால்

# மலத்தியோன் தெளிக்கும் வேலை துரிதம்

யாழ்ப்பாணம், டிச. 30

மலேரியாத் தடுப்பு இயக்கத்தினரால் மலத்தியோன் கிருமிநாசினி தெளிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபை தெரிவித்தார்.

மலேரியா நோயனாரும், மலேரியா பரப்பும் அனோபிலிஸ் குயிலிசியேசிஸ் நுளம்புகளும் அதிகமாகவுள்ள அல்லைப்பிட்டி, அரியாலை, புங்குடுதீவு, மண்கும்பான், வரணி, மட்டுவில், கைதடி பகுதிகளில் தற்போது கிருமிநாசினி தெளிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன

கடந்த 6 மாதங்களாக வடபகுதியில் மலத்தியோன் தெளிக்கப்படவில்லை.

கொழும்பிலிருந்து மலத்தியோன் கிருமிநாசினி கொண்டு வரப்படாமையே இதற்கு காரணம்.

தற்போதுள்ள மழையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாவதால் கிருமிநாசினி தெளிக்கும் வேலை துரிதப்படுத்தப் பட்டுள்ளது. என்றும் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-5)

# வவுனியாவில் இடம் பெயர்ந்த மக்களுக்கு காணி

யாழ்ப்பாணம், டிச 30

வவுனியா விமானத்தள விஸ்தரிப்பு காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமாக அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முடிவு கொடுக்கப்பட்டது.

விமான நிலைய விஸ்தரிப்புக் காரணமாக இப்பகுதியில் இருந்து சுமார் 80 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இக் குடும்பங்களுக்கு பம்பை மடுப்பகுதியில் அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது (உ-10)

## வருடாந்த விருந்துபசாரம்

கொடிகாமம், டிச. 30

பெரிய கல்லூரிகளை நிர்வகிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் இவ் வித்தியாலய அதிபர் திரு. பஞ்சாட்சரம் அவர் இங்கு அதிபராகக் கிடைத்தது இக் கல்லூரிக்கும் இக் கிராம மக்களுக்கும் பெரும் அதிஷ்டம் ஆகும்.

கச்சாய் அரசினர் கனிஷ்ட மகா வித்தியாலய வருடாந்த விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ தங்கராசா இவ்வாறு கூறினர்.

உதவி அதிபர் பண்டிதர் திரு. க. ஜீவரத்தினம் தலைமையில் இவ்வுபசாரம் நடைபெற்றது

திரு. அ. ஆறுமுகம் பேசும்போது சாவகச்சேரி வட்டாரத்தில் உள்ள அதிபர்களுள் விரல்விட்டு எண்ணக் கூடிய ஆங்கில ஆசான்களுள் இவரும் ஒருவர் என்றார்.

ஆசிரியர் திரு. ஐ. சின்னையா, திருமதி பத்மநாதன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (இ-75)

## தாய்ப்பால் உணவு வாழ்விற்கு மூலாதாரமானது

பண்டத்தரிப்பு டிச 30

மக்கள் நல்வாழ்விற்கு தாய்ப்பால் மூலாதாரமானது தாய் அன்பு அரோக்கியம், அறிவு மிக்கவனாக இருந்து பாலூட்ட குழந்தைக்கும் அந்த நல்லியல்புகள் தானே செறிந்துவிடும் இது நல்ல சமுதாயம் உருவாக வழியமைக்கும்.

—இவ்வாறு வைத்திய கலாநிதி செல்வி திருநாவுக்கரசு பண்டத்தரிப்பில் நிகழ்ந்த போஷாக்குப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பெண்கள் சத்துணவு புசிப்பதன் மூலம் தம்மையும் தம்குடும்பத்தையும் நோயற்றவர்களாகவும், திடகாத்திரமும் செயற்திறமையும் உள்ளவர்களாகவும் பேணி வளர்க்க முடியும்.

சத்துணவுப் பொருள்கள் இருந்தும் தயாரிக்கும் வகை தெரியாவிட்டால் அதனால் பயன் இல்லை;

எனவே தான் இன்றைய யுவதிகட்கு சத்துணவுகள் எவை? எவ்வாறு தயாரிப்பது என்பன பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஒவ்வொரு துறை விற்பன்னர்களை அழைத்து விளக்கவுரைகளும், விவரங்களும் வழங்கப்படுகின்றன என்றார்.

சுமார் 48 யுவதிகள் இப்பன்னிரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொள்கின்றனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஏ.எஸ் சிவராச கருத்தரங்கிற்கு தலைமை வகிக்கிறார். (உ-120)

## ஒளி விழா

மண்டைதீவு.டிச.30

மண்டைதீவு மகாவித்தியாலய கத்தோலிக்க மாணவர் மன்ற மாணவர்கள் இம்முறை ஒளி விழாவை சிறப்பாகச் கொண்டாடினார்கள்.

மன்றப் பொறுப்பாசிரியர் திரு துரை ஆரேக்கியதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ-88)

## மூலிகைகளை அடிப்படையாக கொண்டது சித்த வைத்தியம்

இளவாலை டிச.30

பல நாடுகளில் சுதேச மூலிகைகள் கடுமையான நோய்களை பூரணமாக மாற்றியுள்ளன என விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். தொய்வுக்கு மாதோன் என்ற மூலிகை சீனாவில் பயன்படுத்தப்பட்டு எபட்றின் கொம்பவுண்ட் என்ற மருந்து தயாரிக்கப்படுகிறது சித்த வைத்திய முறையில் அறுவை சிகிச்சைக்கு மூலிகைகள் வெற்றிகரமாக உதவுகின்றன.

அண்மையில் தெல்லிப்பளையில் நடைபெற்ற பிரபு பெரிய பரிகாரியார் விழாவில் இடம் பெற்ற தமிழர் சுகாதாரநூல் வெளியீட்டில் உரையாற்றிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

முதன்மை விருந்தினர் திரு. கா இராமநாதர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் (இளைப்பாறிய முன்னாள் அதிபர் திரு ஆ இராமசாமி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில், சுதேச வைத்தியர்கள் இன்றும் என்றும் கிராமத்தில் பெரிதும் மதிக்கப் படுபவர்கள்.

ஆனால் சுதேச வைத்தியத்திற்கு அரசு அமைச்சு நிறுவியிருந்தும் தமிழ் சித்த வைத்தியத்திற்கு உதவுவதில்லை.

உடல் நலம் பேணும் வைத்தியத்தில் சித்த வைத்தியமே தலை சிறந்தது. அறுத்து ஒட்டும் சித்தவைத்திய முறையே 'பிளாஸ்ரிக் சேஜறி'யாக வளர்ந்துள்ளது. இப்படி அவர் கூறினர்.

சிறப்பு விருந்தினரான வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனும் உரையாற்றினர்.

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. சு கதிரவேலு பிரவு பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த உரை நிகழ்த்தினர். (இ-48)



## மக்கள் முகம்

### நலன்புரிச் சங்கம்

செற்பேலி, புதுக்குடியிருப்பு வாழ் மக்களால் கடந்த சனிக்கிழமை நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடத்தப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் திரு. அ. முத்துலிங்கம், உபதலைவர் திரு. நா. இராமகிருஷ்ணன், பொதுச் செயலாளர் திரு. தாமோ. சண்முகராசா, உதவிச் செயலாளர் திரு சி. சாமியப்பன், தனாதிகாரி திரு ம. தியாகராசா, உதவித் தனாதிகாரி திரு சி. இராமநாதன், நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் எ. முனியாண்டி, சா. பாக்கியநாதன், ச மாதையா, சி ரி. அந்தோனிதாஸ், சு செல்வராசா, ரி. சண்முகம், திருமதி. எல் ரீற்று புவனேஸ்வரி. (இ)

## டி. டி. ரி. தெளிக்கப்படவில்லை

வேலணை, டிச 29

வேலணை அரசினர் வைத்தியசாலையில் ஒரு வருடமாக டி, டி. ரி. மருந்தகலவை தெளிக்கப்படவில்லை.

இதனால் வைத்திய சாலையில் நுளம்புத் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. (இ-167)

## செய்திக்கொத்து

### விவரம் சேகரிப்பு

வேலணை, டிச. 30

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்துள்ள பாடசாலை பிள்ளைகள் பற்றிய விபரங்களை உதவி அரசாங்க அதிபர் திரட்டி வருகின்றார்.

சர்வோதய நிறுவனம் அளிக்கும் உதவிகளை இவர்களுக்கு வழங்குவதாகவே இவை திரட்டப்படுகின்றன. (உ-167)

### வடிகால்கள் அமைக்கப்பட்டன

ஊர்காவற்றுறை,டிச.30

புளியங்கூடல் சந்தியிலிருந்து சுருவில், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளுக்கு இரு பக்கமாகவும் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ள இவ் வடிகால்கள் குறித்து பொது மக்கள் திருப்தி தெரிவித்துள்ளனர். (உ-16)

### தரகர்கள் தொல்லை

வட்டுக்கோட்டை,டிச30

சங்கானைச் சந்தையில் தரகர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இச்சந்தைக்குத் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குக் கொண்டு வருவோர் தரகர்களிடம் அகப்பட்டு பொருட்களை விற்க முடியாது பெரும் கஷ்டப் படுகின்றனர் (உ-16)

### கருத்தரங்கு

சாவகச்சேரி, டிச 30

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் தென்னை உற்பத்தி செய்பவர்கட்கான கருத்தரங்கொன்று நடைபெற்றது.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. ஏ. செல்லையா தலைமையில் ஆரம்பமான இக்கருத்தரங்கில் தென்னை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த திரு ரி கணேசலிங்கம் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (உ-31)

### பெற்றோர் கவலை

மண்டைதீவு, டிச.30

மண்டைதீவு மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு கட்டட வேலைகள் பல மாதங்களாக ஸ்தம்பித்த நிலையில் இருப்பதால் இப்பகுதி பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கடந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த புதிய கட்டட வேலைகள் இன்றுவரை முடிவடையாத காரணத்தால் மாணவர்கள் இடவசதியின்மையால் கஷ்டமடைந்து வருகின்றார்கள். (உ-88)

### திருத்தம்

வேலணை, டிச. 30

பழுதடைந்திருந்த வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனவு நிலையம் தற்பொழுது திருத்தப்பட்டுள்ளது. இந் நிலையத்தில் எரிபொருள் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப் பட இருப்பதாக இச் சங்கத்தின் தலைவர் திரு. வி. சிவராஜா தெரிவித்துள்ளார். (உ-167)

## ஒளி விழா எல்லா மதங்களுக்கும் பொதுவானது

### வங்கி முகாமையாளர் உரை

யாழ்ப்பாணம், டிச. 30

ஒளி விழா எல்லா மதங்களாலும் அனுஷ்டிக்கப்படுகின்றது எல்லா மதங்களுக்கும் இது பொதுவானது.

யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி இரண்டாம் கிளை முகாமையாளர் திரு. இரா. வில்லவராஜா மேற்கண்டவாறு கூறினர்.

பிரஸ்தாப வங்கிக் கிளையில் ஞாயிறு மாலை முதல் தடவையாக நடத்தப்பட்ட ஒளி விழாவில் வங்கி உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

வங்கியின் விளையாட்டுக் கழக ஆதரவில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. இரா. வில்லவராஜா தொடர்ந்து பேசுகையில் இந்த வங்கியில் சிவராத்திரி விழாவை நாம் கொண்டாடி வருகிறோம். அதே போன்று இம் முறை ஒளி விழாவையும் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம் என்றார்.

இந்த விழாவில் சிறுவர்களைக் கவரும் விதத்தில் பல போட்டிகள் நடத்தப்பட்டன. இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

இறுதியில் சிறுவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

திரு. வி. ரி. ராஜேந்திரா நன்றியுரை கூறினர். (இ)

ஆரம்பசுகாதார நிலையங்களால்

## வெளி நோயாளர் எண்ணிக்கையை குறைக்க முடியும்

சாவகச்சேரி, டிச.30

வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பகுதிகளில் பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கையை ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டால் நிச்சயமாக குறைக்கமுடியும்.

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. கனகசபை இவ்வாறு கூறினர்.

நுணாவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலைய முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இளைப்பாறிய அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் வைபவம் நடைபெற்றது.

நகராட்சி மன்ற செயலாளர் திரு. த. நவரத்தினராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

வைத்திய கலாநிதிகள் ரி. சோமசுந்தரம், என். சண்முகநாதன், ரி. கருணானந்தன், செல்வி எஸ். யோகவதி ஆகியோர் கருத்துரைகளையும் வைத்திய கலாநிதிகள் திருமதி சாம்பசிவம், வி. சின்னப்பு, செல்வன் நா. சுவிந்தன் ஆகியோர் சிறப்புரைகளையும் வழங்கினர். (இ-31)

## தேசிய இளைஞர் சேவை மன்ற விவசாயப் பண்ணை

### பல பிரிவுகளாக இயங்குகிறது

பலாலி, டிச 30

அச்சுவேலியிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் விவசாயப்பண்ணை பல்வேறு பிரிவுகளைக் கொண்டதாக இயங்குகின்றது.

தென்னம் நாற்று மேடைப்பண்ணை, மாட்டுப்பண்ணை, உப உணவுப் பயிர்ச் செய்கைக்கான நாற்றுமேடைப் பண்ணை, சுயதொழில் பயிற் செய்கைப்பண்ணை என்பன மிக வெற்றிகரமான முறையில் இயங்குகின்றன.

யாழ் மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றம் முதலாவதாக அமைத்த இப்பண்ணை எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலாக வெற்றி அளித்துள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு எஸ். கார்த்திக் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் முதலாவதாக 1987 ஆம் ஆண்டு தொடக்கம் பட்டுப்பூச்சி வளர்ப்பும் இங்கு மேற்கொள்ளப் படவுள்ளது.

சுமார் 12 ஆண்டுகளுக்குமுன் பட்டுப்பூச்சி வளர்க்கபபட்ட இடத்திலேயே இப்பண்ணைகள் அமைந்துள்ளன (இ-119)


## முதலீட்டு வாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள நன்கு ஸ்தாபிதம் பெற்ற பொறியியல் நிறுவனமொன்று தனது எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு மேலதிக முதலீட்டை வேண்டுகிறது. பங்குதாரர்களாகச் சேர்வதில் ஆர்வமுள்ளோர் மேலதிக விபரங்களைத் தயவு செய்து பின்வரும் முகவரியில் பெறவும்.

BUSINESS PROMOTERS LTD,
First Floor, 198 (76), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விழித்திருப்பு ஆராதனை

இடம்: கல்வாரி தேவாலயம்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்னால்)

காலம்: 31 - 12 - 86

நேரம்: இரவு 10-30

தேவசெய்தி: சுவி. வெ. மத்தியூஸ்

கர்த்தருடன் புது ஆண்டை ஆரம்பிப்போம்.

# நவீன அணுகுமுறையில் தயாரிக்கப்பட்ட சக்தி வாய்ந்த திரவ கெந்தகம் (சல்பர்)

# சுப்பர் சிக்ஸ்




மிளகாய் குருமன் நோயை கட்டுப்படுத்தவும் திராட்சை பூஞ்சண நோய் (டௌனி மில்டியு) கட்டுப்படுத்தவும் மற்றும் பயிர்களில் இலையில் ஏற்படும் துரு நோயையும் சிற்றுண்ணிகளையும் கட்டுப்படுத்த அதி சிறந்தது.

எச்சரிக்கை:- எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

விலை:
200 மி.லி. ரூ. 31.50
500 மி.லி. ரூ. 65.50
9.46 லீ. ரூ. 1110.00

அங்லோ-ஏசியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டெட்
த.பெ. இல. 1034, சாற்றட் வங்கி கட்டிடம் கொழும்பு-1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனிதன் மரிப்பது ஒரு தரமே! திடங் கொள் தைரியமாக இரு'

— சுவாமி விவேகானந்தர்

உதயன்

இல,15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 30-12-1986 த.பெ இல 23

## வெட்கம், வெட்கம், வெட்கத்திலும் வெட்கம்!

யாழ்ப்பாணம் பண்ணையில் இயங்கிய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் இருந்த ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் காணவில்லை.

இந்த அதிர்ச்சி தரும் தகவல் பிரஸ்தாப நிலையத்துக்கு விஜயம் செய்த அதிகாரிகள் குழு ஒன்றின் மூலம் தெரியவந்திருக்கிறது.

பண்ணை மார்புச் சிகிச்சை நிலையம், கோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்திருக்கிறது. அங்கிருந்து அடிக்கடி ஏவப்படும் ஷெல் குண்டுகளாலும், தீர்க்கப்படும் துப்பாக்கி வேட்டுக்களாலும் சிகிச்சை நிலையம் பல தடவைகள் பாதிக்கப்பட்டதுண்டு

அங்கு தொடர்ந்து இயங்கினால் நோயாளருக்கும், பணிபுரியும் ஊழியருக்கும் உயிராபத்து ஏற்படும் நிலைமை உருவாகி இருந்தது அதனை உத்தேசித்து சிகிச்சை நிலையம் நீண்டகாலமாகச் செயற்பாடு இன்றிக் கிடக்கிறது

சிகிச்சை நிலையம் இயங்காவிட்டாலும் அது மூடப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் அங்கிருந்த வைத்திய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அகற்றப்படாதிருந்தன

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை நிலையத்தை பார்வையிடச் சென்ற அதிகாரிகள் குழு கண்ட காட்சி அவர்களைத் திணுக்குற வைத்தது

பெறுமதி மிக்க வைத்திய உபகரணங்கள் மட்டுமின்றி கட்டடத்தின் ஓடுகள், மரங்களைக் கூட காணவில்லை.

இது அதிர்ச்சி தரும் — திடுக்கிட வைக்கும் விஷயம் மட்டுமல்ல; ஆழ்ந்த கவலை — மனவருத்தம் தருவதுமாகும். பெரும் வெட்கக் கேடானதுமாகும்.

பொதுச் சொத்தைப் பேணுவதில் எமது மக்கள் எவ்வளவு போக்கிரித்தனமாக நடக்கிறார்கள் என்பதற்கான ஓர் அளவுமானி என்றும் சொல்லலாம். எமது மக்கள் எவ்வளவு கீழ்த்தரமானவர்கள், பொதுச்சொத்தைக் கையாடும் கபவர்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம் என்று கூறினும் மிகையாகாது.

கிராமத்தில் ஒரு சிறிய நூல் நிலையத்தை - வாசிகசாலையைக் கட்டுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கும் என்பது அதில் ஈடுபட்டவர்களுக்குத் தான் தெரியும். பெரும் தனவந்தர்களின் வீடுகளுக்குப் படியேறினாலும் போதிய பணம் வந்து சேராது.

அப்படியிருக்க பெரிய சிகிச்சை நிலையம் ஒன்றைக் கட்டி அதற்கு உபகரண வசதியும் செய்ய எந்தளவு பெரு நிதி தேவைப்படும் எனச் சிந்தித்துப் பாருங்கள். அந்தளவு நிதியை நாமே சேகரிப்பது என்றால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

இப்போதுள்ள நிலையில், கையாடப்பட்ட உபகரணங்களுக்குப் பதில் அரசாங்கம் புதிய உபகரணங்கள் தந்து உதவும் என்று எதிர்பார்க்கத்தான் முடியுமா? அல்லது புதிதாக ஒரு சிகிச்சை மண்டபத்தைத் தான் அது கட்டித் தருமா?

பொதுச் சொத்தை நாசம் செய்வதால் நஷ்டம் மக்களுக்குத் தான். எங்கள் பிரதேசத்தில் உள்ள சொத்தை தனிப்பட்டவர்கள் அல்லது கோஷ்டியினர் தமது சொந்தத் தேவைக்குக் கையாடுவதால் நஷ்டம் எங்கள் மக்களுக்குத் தான். இதனை எமது பிரதேச மக்கள் உணர்வதாக இல்லை.

அரசாங்கச் சொத்து அல்லது பொதுச் சொத்து என்றால் எப்படியும் சேதம் செய்யலாம், நாசம் செய்யலாம் என எம்மவர்கள் நினைக்கிறார்கள். தமக்குத் தனிப்பட்ட முறையில் சொந்தமில்லாத சொத்துக்களை எப்படியும் செய்யலாம், எதுவும் செய்யலாம், கையாடவும் செய்யலாம் எனக் கருதுகிறார்கள். மனச்சாட்சியைச் சிறிதேனும் தட்டிப் பார்ப்பதில்லை.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கம்பீரமாக நின்ற சிங்கள மகாவித்தியாலயம் இருந்த இடத்தைப் பார்த்தால் தேசாபிமானம் மிக்க எவனுக்கும் வயிறு பற்றி எரியும்.

அந்தக் கட்டடத்துக்கு வன்செயலின் போது ஏற்பட்ட சேதத்தின் பின்னர் அது இருந்த இடமே தெரியவில்லை. அத்திவாரத்துக்குப் போடப்பட்டிருந்த கற்களைக் கூடக் கிளறி எடுத்து விட்டார்கள்!

அந்தப் பாடசாலைக் கட்டடம் உருப்படியாக இருந்தால், இப்போது அதில் ஒரு தமிழ் வித்தியாலயத்தை நிறுவி இருக்க முடியாதா?

பொதுச் சொத்துப் பேணும் பெருங் குணமும், குடியியல் உணர்வும், தேசாபிமானமும் எம்மிடம் இல்லையெனில் நாம் சுதந்திரத்துக்கும், உரிமைக்கும் போராடி அவற்றைப் பெறினும் என்ன பயன்?

எமது சமுதாயம் பொதுச் சொத்தைக் கையாடும் சமூகமாக இருக்கும் வரை எங்களுக்கு எங்கே வரப்போகிறது விடிவும், சுபீட்சமும்?

## வெளி உலகில்

### ராடர் கருவிகள்

வாஷிங்டன், டிச. 29

பிரிட்டனிலும் கிறீன்லாந்திலும் இரண்டு பெரிய ராடர் கருவிகளை நிறுவும் தனது திட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றி வருகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக ஆயுதக் கட்டுப்பாட்டு நிபுணர்கள் கருத்துத் தெரிவித்த போதும் இது நிறைவேற்றப்படுகின்றது

இத்திட்டத்தை அமெரிக்கா கைவிட்டால் மத்திய சைபீரியாவில் அதி நவீன ராடர் கருவியை இயக்கி வைக்கும் பணியை தான் நிறுத்தி விடுவதாக ரஷ்யா அறிவித்தது. (ஒ)

### நிபுணர் மீது விசாரணை

லண்டன், டிச. 29

பிரிட்டிஷ் செய்தி ஏடு ஒன்றிற்கு இஸ்ரவேலின் அணு ஆயுத இரகசியங்களை விற்ற குற்றத்திற்காக இஸ்ரவேல் அணு சக்தித் தொழில் நுட்ப நிபுணர் வனுனு மீது இஸ்ரவேலில விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

அவர் மீது ஊழல் அரச துரோக குற்றம் ஆகியன சுமத்தப்பட்டுள்ளன. அதிகபட்ச தண்டனையாக அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படலாம். விசாரணை இரகசியமாக நடைபெறும். (ஒ)

### பிரசாரம் சூடுபிடிக்கிறது

பொன், டிச. 29

மேற்கு ஜேர்மனியில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் தேர்தல் பிரச்சார வேலைகள் ஆரம்பித்துள்ளன

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் போட்டிக் குழுக்களுக்கிடையே பலப்பரீட்சை இடம் பெறுவதாகத் தெரிகிறது

ஆனால் பொதுஜன அபிப்பிராய மதிப்பீடுகளின்படி ஜனாதிபதி ஹெல்மட் ஹோல் தலைமையிலான கட்சி இத்தேர்தலில் இலகுவாக வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

### சோமாலியா ஜனாதிபதி வெற்றி

மொகரடிஸ்கு. டிச, 29

சோமாலியாவில் கடந்த வாரம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி முகமட் பார்ரே மீண்டும் வெற்றி பெற்றார்.

அடுத்த ஏழு வருடங்களுக்கு இவர் பதவி வகிப்பார்.

69 வயதான ராணுவ ஜெனரல் 1969 ஆம் ஆண்டில் ராணுவப் புரட்சி மூலம் பதவியைப் பிடித்திருந்தார். 1976 ஆம் ஆண்டு முதல் சோமாலியா புரட்சி சோஷலிசக் கட்சி என்ற கட்சிமூலம் இவர் நாட்டை நிர்வகித்து வருகின்றார். (ஒ)

## அமெரிக்காவுடன் மீண்டும் தொடர்பு இல்லை; ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், டிச. 29

அமெரிக்காவுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தும் சாத்தியம் கிடையாது.

இவ்வாறு ஈரான் வெளிநாட்டு அமைச்சு அறிவித்தது.

அமெரிக்காவுடன் சமரசமே இருக்காது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு உறவுகளைப் புதுப்பிக்கும் நோக்கமாக ஈரானுக்கு ஜனாதிபதி றேகன் ஆயுதங்களை அனுப்பினார் என்று அமெரிக்காவில் செய்தி வெளியாகி இருப்பதையொட்டி ஈரானிய வெளிநாட்டமைச்சு இப்படித் தெரிவித்தது. (ஒ)

## இஸ்ரவேல் பிரதமர் நிரபராதி

தெல்அவிவ், டிச.29

இஸ்ரவேலில் 1984ஆம் ஆண்டு அரபு பஸ் ஒன்று கடத்தப்பட்டதற்கும் அதில் இருவர் கொலை செய்யப்பட்டதற்கும் இஸ்ரவேல் பிரதமர் ஷாமிருக்கு எந்தவகையான தொடர்புகளும் இல்லை.

இவ்வாறு இஸ்ரவேல் உயர்நீதி மன்றம் தெரிவித்தது.

இது திட்டமிடப்பட்ட ஒரு அரசியல் புயல் எனவும் இஸ்ரவேலிய கூட்டு அமைச்சரவைக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் அமைந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியொன்றுக்குச் சென்று கொண்டிருந்த பஸ்ஸைக் கைப்பற்றிய நான்கு பாலஸ்தீனியர்களில் இருவர் கொலை செய்யப்பட்டனர். (ஒ)

## சீன அரசியல் குழு ஆராய்கின்றது

பீகிங், டிச. 29

சீனாவில் அண்மையில் நடந்த மாணவர் ஆர்ப்பாட்டங்கள் குறித்து சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு ஆராய விருக்கின்றது.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழு அடுத்த ஆண்டிற்கான செயற் திட்டங்களை ஆராய்வதற்காக விசேட கூட்டமொன்றை விரைவில் நடத்தும்.

கடந்த சில வாரங்களில் மாணவர் எதிர்ப்பு ஆரப்பாட்டங்கள் நடந்ததால் இவற்றைப் பின்னணியாக வைத்து அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

பிரதமர் ஸுவோ சியாங் நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக் கூறும் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பார்

மாணவர் மத்தியில் ஏற்பட்ட அமைதியின்மைபற்றி விசாரிக்க விசேட சபை ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது (ஒ)

## சாக்கரோவ் உரையாற்ற அனுமதி

மாஸ்கோ, டிச. 29

ரஷ்ய ஆட்சி அமைப்பை எதிர்க்கும் பிரபல விஞ்ஞானி அந்திரி சாக்கரோவ் மாஸ்கோவிலிருந்து அரச தொலைக்காட்சி மூலம் அமெரிக்க மக்களுக்கு உரை நிகழ்த்த அனுமதிக்கப் பட்டுள்ளார்.

செய்மதித் தொடர்பின்மூலம் இவரது உரை அமெரிக்காவுக்கு அஞ்சல் செய்யப்படும்.

ஏழாண்டு காலம் தூர இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாக்கரோவ் கடந்த செவ்வாய்க்கிழமை மாஸ்கோ திரும்ப அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பேச்சுச் சுதந்திரத்திற்காகவும் ஏனைய அரசியல் கைதிகள் விடுதலைக்காகவும் தாம் தொடர்ந்தும் போராடப் போவதாக அவர் தெரிவித்தார். (ஒ)

## தமிழ்க் கவிஞர்கள் மாநாடு

சென்னை டிச,29

உலக தமிழ்க் கவிஞர்கள் மாநாட்டை இன்று துணை ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் சென்னையில் ஆரம்பித்துவைத்தார்.

உலகம் பிரிவினையிலும் அநீதிகளிலும் சிக்கியிருப்பதாகவும் இதனை மாற்ற கவிதைகள் மூலம் ஒருங்கிணைந்த உலகத்தை உருவாக்க கவிஞர்கள் முயல வேண்டும் என வெங்கட்ராமன் கருத்து வெளியிட்டார்.

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் உலக தமிழ் கவிஞர்கள் மகாநாட்டின் சின்னத்தை வெளியிட்டார்.

எட்டு நாடுகளிலிருந்து பல்வேறு கவிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றார்கள். (ஒ)

# இருதயநோயை தடுக்க வழி முறைகள் என்ன?

### கருத்தரங்கில் விளக்கம்

இளவாலை, டிச. 30

இருதய நோய் வராது தடுக்க கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியில் நடந்த இருதயநோய் பற்றிய கருத்தரங்கில் பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகமும் இளவாலை சமூக அபிவிருத்திக் கழகமும் இணைந்து ஒழுங்கு செய்த இந்த கருத்தரங்குக்கு லயன்ஸ் கழகத் தலைவர் திரு. பீ. அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார்.

கருத்தரங்கு முதல்வராக பேராசிரியர் என். சரவணபவானந்தன் பங்குகொண்டார்

பேராசிரியர் பரமேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், இருதயம் ஒழுங்காக இயங்குவதை தடை செய்வது கொழுப்பு.

எனவே கொழுப்பு உணவைத் தவிர்க்க வேண்டும்.

கொழுப்பைக் குறைக்க ஓரளவு அப்பியாசத்தைச் செய்யவேண்டும். நோயாளிகள் உப்பைக்குறைத்து தவணை தப்பாமல் மருந்துகளை உபயோகித்து வருதல் வேண்டும்.

உயர் இரத்த அமுக்கம், மனச் சஞ்சலத்தாலும், குழாய்களில் இரத்தம் தேங்குவதாலும், புகை பிடித்தலாலும் ஏற்படும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும் இப்படி அவர் கூறினார்.

பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியகலாநிதி என். சிவராசா பேசுகையில் ஏ. பீ. இரத்த குறாப் உள்ளவர்கள், 40,50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் நிறை கூடியவர்கள் வைத்திய பரிசோதனை செய்வது நோயைத் தடுக்க உதவும்.

குறிப்பாக சலரோகம் உள்ளவர்கள் இருதய நோய் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் மிருகமூளை, ஈரல் மிருகக்கொழுப்பு முட்டை ஆகியவற்றை விலக்கி கீரை, மரக்கறி போன்றவற்றைச் சேர்க்கவேண்டும் என்றார்.

வைத்தியகலாநிதி ஆர். எவ். ஜேம்ஸ் நோயின் அறிகுறிகள் பற்றிக் கூறுகையில், "தலையிடி, நாசியால் இரத்தம் வடிதல், இருதயப் பெலவீனம், இருதய வீக்கம், பாரிசவாதம், சிறு நீரகம் இயங்காமை, கண்ணில் இரத்தத் தேக்கம் ஏற்பட்டு பார்வை குன்றல் முதலியவை இருதய நோய்க்கு அறிகுறிகளாக இருக்கின்றன. என்றார்.

சிரங்கை வளரவிடல், சிறுவதில் வாதம், காய்ச்சல் போன்றவற்றைத் தடுக்காமை, அளவில்லாமல் கடும் தாக்கம் தரும் மருந்துகளைப் பாவித்தல் கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை கூண்ணல், றொன்சில் வியாதியைத் தடுக்காமை என்பவற்றால் இருதயவியாதி உண்டாகலாம். எனவே, நோய்கண்டவுடனுக்குடன் வைத்தியப் பரிசோதனையை நாடவேண்டியது அவசியம் என்றார்.

வைத்திய கலாநிதி திருமதி சரவணபவானந்தன் சிகிச்சை முறைளும் மருந்து வகைகளும் பற்றி விளக்கினர். (இ-48)

## ஒளிவிழா நிகழ்ச்சி கொண்டாடுவது ஏன்?

### கல்லூரி அதிபர் விளக்கம்

கரவெட்டி, டிச. 30

இருள் சூழ்ந்த உலகை ஒளிமயமாக்கிய இறைவன் ஒளி வடிவாகவே நம்முன் பலமுறை தோற்றியுள்ளார்" என்று வேதாகமம் கூறியுள்ளது. இந்த அடிப்படையிலேயே கிறிஸ்துவின் பிறப்பு விழாவை ஒளி விழாவாகக் கொண்டாடுகின்றோம்.

இவ்வாறு கரவெட்டி இருதயக் கல்லூரியில் இடம்பெற்ற கத்தோலிக்க மாணவர் மன்றத்தின் ஒளி விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் அதிபர் திரு. எஸ். வின்சன் குறிப்பிட்டார்.

கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு. சகாயநாயகம் அடிகளார், பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. ஜொனிபஸ் அடிகள், கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை போதகர் வண. கே. கதிர்காமர், புனிதஜூதார் கார்மேக மரத்தடி அருட்செல்வி ஜேம்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (உ-70)

### உணவு முத்திரை

பலாலி, டிச. 30

மயிலிட்டிப் பகுதியில் மீனவர் நிவாரண உணவுமுத்திரை பெறத் தவறியவர்களுக்கு உணவுமுத்திரை வழங்கப்பட வேண்டும்.

கடற்றொழில் விரிவாக்க சேவை அதிகாரி திரு. எஸ். சிவஞானம் மேற்கண்டவாறு அரசாங்க அதிபருக்கு சிபார்சு செய்துள்ளார். (இ-119)

## பட்டுப் பூச்சி வளர்ப்புக்கு ரூ. 25 ஆயிரம்

யாழ்ப்பாணம், டிச.30

அச்சுவேலியில் மீண்டும் பட்டுப்பூச்சி வளர்ப்புக்கென ஆரம்ப வேலைகளுக்கு 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்நிதியை அரச அதிபர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஒதுக்கியுள்ளார்.

இந்நிலையம் கடந்த இருவருடங்களாக இயங்காமல் உள்ளது. (இ-5)

### ஆரம்ப நிகழ்ச்சி

வேலணை, டிச. 30

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடத்தப்படும் வீடற்றோருக்கான சர்வதேச வீடமைப்பு ஆண்டு ஆரம்பநிகழ்ச்சியும், சமய வைபவங்களும் எதிர் வரும் முதலாம் திகதி முற்பகல் 9 30 மணிக்கு நடைபெறும். (இ-167)

## வாசகர் திருமுகம்

### வல்லிபுரக்கோயில் அருகாமையில் காணிப் பங்கீடு

தங்கள் 10-12-86 பத்திரிகையில் வெளிவந்த வல்லிபுரக் கோயிலுக்கு அருகாமையில் காணிகள் கொடுப்பனவு பற்றிய செய்தி படித்து மிகவும் கவலைப்பட்டோம்.

எங்கள் சேவாச்சிரமம் 17 வருடங்காளக இயங்கிவருகின்றது. கடந்த இருவருடங்களாக கிட்டத்தட்ட 100 குடும்பங்களின் (பாதிக்கப்பட்ட) புனர் அமைப்பு விடயமாக பணி செய்கிறோம்.

இக்காணிகள் கொடுப்பனவு பற்றி எங்களுக்குத் தெரிந்தமட்டில் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தையும் பார்க்க முடியவில்லை. எங்களை நாடி வீடு இல்லாத பலர் பல தடவை வந்துள்ளார்கள். இவர்களுக்கு தக்கதொரு வீட்டுத் திட்டத்தை செயல்படுத்த எண்ணியும் காணி கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பலர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யுமாறு எங்களுக்குச் சிபார்சு செய்தும், எங்கள் சேவாச்சிரமத்துக்கு இது சம்பந்தமாக அறிவிக்காதது பெரிய ஆச்சரியமாக இருக்கிறது

நீதி நேர்மை இல்லாத எச்செயலும் உலகில் நிலைத்தது இல்லை. எங்கள் பணிக்கு இலங்கைக்கு வெளியில் இருந்து பலர் உதவி செய்கிறார்கள். இந்த அரசாங்கம் 17 வருடங்களில் எங்களுக்கு கொடுத்த நிதி ரூபா 700 மட்டுமே நிதி தராவிட்டாலும் இக்காணி விடயத்தில் ஆவது ஒதுக்கீடு செய்யத் தவறி விட்டது.

பருத்தித்துறை — சுவாமி சித்ருபானந்தா

## ஆரம்பபாடசாலை அனுமதி இனி அதிக கண்காணிப்பு

பலாலி, டிச. 30

யாழ் மாவட்டத்தில் பிரபலியம் வாய்ந்த ஆரம்பப் பாடசாலைகளின் அனுமதி விடயத்திலும் கல்வித்திணைக்களம் இனிமேல் மிகுந்த கவனத்தைச் செலுத்தவுள்ளது

இதுவரை காலமும் தூர இடங்களில் இருக்கும் வசதி படைத்தவர்கள் தத்தமது தனிப்பட்ட செல்வாக்குகளைப் பயன்படுத்தி -பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள பொய்யான முகவரிகளைக் கொடுத்து- ஆரம்ப பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துள்ளனர் என்பதும்-

அப் பாடசாலைகளில் கல்விகற்கும் காரணத்துக்காக அதற்கண்மையிலுள்ள பிரபல்யமான- தெரிவு செய்யப்பட்ட- பெரிய பாடசாலைகளுக்கு அனுமதிக்காக பிழையான முறையில் உரிமை கோருகிறார்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டதாலேயே இனிமேல் இவ் அனுமதியிலும் மிகக் கண்டிப்பாக இருக்க கல்வித்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கென ஒரு அனுமதிக்குழு தெரிவு செய்யப்படும்.

இதில் பாடசாலையின் அதிபர், உப - அதிபர், வட்டாரக்கல்வி அதிகாரி, பாடசாலை அபிவிருத்திச்சபையின் நிர்வாக உறுப்பினர் ஒருவர் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆகிய ஐந்து பேர் அங்கத்துவம் வகிக்கவுள்ளனர்.

இக் குழுவின் சிபார்சின்றி எவ்வித அனுமதியும் செய்யக்கூடாதென குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு கல்விப்பணிப்பாளரால் அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-119)

## சீரிய நல்வாழ்வுக்கு சமயக்கல்வி அச்சாணி

யாழ்ப்பாணம்,டிச. 30

"எந்தவொரு சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வும் இன்றைய சிறார்களின் ஒழுக்க சீலத்திலும் பெற்றோர் ஆசிரியர்களின் சீரிய வழி நடாத்துதலிலும் பெரிதும் தங்கியுள்ளது. இதற்கு அச்சாணியாக அமைவது சமயக்கல்வி எனவேதான் கல்வித் திட்டத்திலும் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது இவ்வாறு யாழ் இளைய தம்பி இந்து வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் கூறினார்.

வண். வடமேற்கு ஐயனார் கோயிலடி சனசமூக நிலையத்தினரால் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட சைவசமயப் பரீட்சையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் பொழுது அவர் இப்படிக் கூறினார். (உ)



## பொய்யாமொழி

குறள்:

யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

பொருள்:

[illegible] எனக் கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக் கருதலும் ஆகிய மயக்கத்தைப் போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை அடைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Uduvil Girls' College**

1. Stenography - (London)
2. Home Economics - Icing, Embroidery, Hair Dressing
3. General English
4. பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நேர்முகப் பரீட்சை 5-1-87

Dept., of Further Education — Miss R.J. MANN, Director.



# உதயன்

30 · 12 · 1986 செவ்வாய்க்கிழமை



**Uduvil Girls' College**

1. National Certificate in English
2. Diploma in English Registration: 6 - 1 - 1987
3. Pre-School Teacher Training. Interview 9 a.m. on 5 - 1 - 1987

Dept of Further Education. — Miss R J. MANN Director.


## அந்தமான்தீவுகளில் இருந்து ராஜீவ் திரும்பியபின்பே அடுத்த நடவடிக்கை

புதுடில்லி, டிச. 30 விடுமுறையைக் கழிக்க அந்தமான்தீவுக்குச் சென்றுள்ள பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லி திரும்பியபின்னர்தான், இலங்கை இனப் பிரச்சினையின் அடுத்த கட்ட நடவடிக்கைபற்றித் தீர்மானிக்கப்படும்.

இப்படி புதுடில்லிஅரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தூதர் பெர்னுட் திலகரத்தின புதுடில்லி திரும்பியதும் இந்திய வெளியுறவு அமைச்சச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப்பேசினர்.

திரிபுரா பிரச்சினையில் அக்கறை செலுத்தும் இணை அமைச்சர் ப சிதம்பரம், இணை அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரை இவ்வாரம் திரு. திலகரத்தின சந்திக்க இருக்கிறார்.

அம்பாறைத் தொகுதியைத் தவிர்த்து அமைக்கப்படும் புதிய கிழக்கு மாகாணசபை பற்றிய யோசனையைத் தான் இணைஅமைச்சர்கள் புதுடில்லியில் வைத்து தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனிடம் தெரிவித்திருந்தனர்.

இப்போது இலங்கையின்புதியநிலைப்பாட்டை தமிழ்நாடு முதலமைச்சருக்குத் தெரிவிக்கவேண்டிய நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி புதுடில்லிஅரச வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

## தி. மு. க. தலைமையில் ஆர்ப்பாட்டப் பேரணி

### ஜனவரி 2 இல் நடக்கும்

சென்னை. டிச, 30 அ.தி மு.க.அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்த்துதி மு க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சிஆகியன ஜனவரி 2ஆம் திகதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தத் திர்மானித்து உள்ளன.

பேரணிகளின் முடிவில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் அரசின் அடக்கு முறைகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

தி.மு க எம் எல்ஏக்கள் பத்துப்பேரை தமிழ்நாடு சட்டசபை பதவி விலக்கியது, தி.மு.கதலைவர் கலைஞர்கருணாநிதியைக் கைது செய்தது ஆகியவற்றைக் கண்டிப்பதும்இந்தப் பேரணிகள் நடத்தப்படுவதன் நோக்கம் என்று அறிவிக்கப்படுகிறது.

மூன்று கட்சிகளின் இணைப்புக் கூட்டம் ஒன்றில் தான் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வருமாறு: என். வி. என். சோமு (தி மு.க எம். பி) நீலநாராயணன்(தி மு க எஸ் வரதராஜன்(மார்க்ஸிய கம்யூனிஸ்ட்) பி. மாணிக்கம்(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி) (இ-எ)

## இந்திய உதவியுடனேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு

### டுபாயில் ஜெனி தகவல்

டுபாய், டிச. 30 இந்திய அரசின் உதவியுடன் இனப் பிரச்சினைக்குத் திர்வு விரைவில் உருவாகும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இப்படி நிதி அமைச்சர் ஜெனி டி மெல் டுபாயில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமாதான உடன்பாடு காணும் வாய்ப்பு 85 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மாகாணசபை யோசனைகளின் அடிப்படையில் தான் இச் சமாதான உடன்பாடு காணப்படும். வடக்கு மாகாணத்துடன் இணைவதை கிழக்கு மாகாண மக்கள் எதிர்க்கின்றனர்.

இதைக்கூட சமாளிக்கும் சாத்தியம் பற்றி ஆராயப்படுகின்றது.

மாகாணங்களுக்கு இடையே ஓர் இணைப்பை உருவாக்கும் திட்டம் ஒன்றை அரசு சமர்ப்பித்துள்ளது.

புத்தாண்டு தினத்தன்றும் யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப்படுவது பற்றி உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் இல்லை.

— இப்படி திரு ஜெனி டி மெல் சொன்னார். (இ-எ)

## கிட்டுவின் பிறந்த தினத்தில் விசேடபிரார்த்தனை

பருத்தித்துறை டிச 30 யாழ் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி திரு. கிட்டுவின் பிறந்தநாள் விழா ஜனவரி 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் கொண்டாடப் படவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியை முன்னிட்டு 2ஆம், 12ஆம், 22ஆம் திகதிகளில் பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்த ஜயந்தி தினத்தில் யாழ். மாவட்டத் தளபதி திரு கிட்டுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவர் பல்லாண்டு வாழ்வதற்கு நீண்ட ஆயுள் வழங்க விசேட பிரார்த்தனையும், இன்றுவரை வீரமுடன் போராடி வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மா சாந்தியடைய ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

திரு. கிட்டுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ன்னை சாரதா சேவாச்சிரமத்தினூடாக பருத்தித்துறை கலைஞர் வட்டத்தினர் நிவாரண உதவிகளையும் வழங்குவர்.

2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு பருத்தித்துறை மருதடி ஞான வைரவர் கோவிலிலிருந்து சுவாமி விவேகானந்தரின் திரு உருவப்படம் ஊர் வலமாக ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விசேஷ பூசைகள் நடைபெறும்.

சுவாமிசித்ரூபானந்தா இதனை அறிவித்துள்ளார். (இ-118)

## அடகு வைத்தோர் பிரச்சினை குறித்து

### அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிச. 30 நகை அடகு வைத்தோரின் பிரச்சினை, மக்கள் வங்கிக்கிளைகள் இயங்காமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகியவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்கும் படி யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு இ. சிவமகாராசா யாழ் அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. சிவமகாரா, யாழ் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து இருக்கிறார்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் வங்கிகள் இயங்காமல் இருப்பது பல இடர்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. கிறிஸ்மஸ், புது வருட ஆரம்பம், தைப் பொங்கல் போன்ற விசேட தினங்கள் வரும் காலக்கட்டத்தில் தம் வேதனம், ஓய்வூதியம், சேமிப்பு முதலியவற்றை வங்கிகள் ஊடாகப் பெறுபவர்கள் அவற்றைப் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது மக்கள் ஸ்தாபனங்கள் தங்களுடைய பணத்தை, கடன் வசதிகளைப்பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் அத்தியாவசிய உணவு தேவையை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றன.

இப்படி திரு. சிவமகாராசா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-எ)

## கொழும்பிலும் சில தினங்கள் தங்கினர்

### மோஹன்தாஸ் பற்றி மேலும் சில தகவல்கள்

சென்னை, டிச, 30 தமிழ் நாடு இரகசியப் பொலீஸ் ஆணையாளர்கள் கே. மோஹன்தாஸ் சிங்கப்பூரில் இருந்து சென்னை திரும்பும் மார்க்கத்தில் கொழும்பில் சில தினங்கள் தங்கியிருந்தார்.

இப்படி சென்னை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

60 நாள் கட்டாய விடுமுறையில் திரு மோஹன்தாஸ் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத்தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையில் தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது தமிழ்நாடு பொலீஸார் நடத்தியவேட்டை அமெச்சூர்த்தனமானது என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டதை திரு மோஹன்தாஸ் கண்டித்திருக்கிறார்.

"தமிழ்ப்போராளிகள் மீது நடவடிக்கைஎடுத்து தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்ட வேண்டும் என்று 'இந்து' ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருந்தது.

"அப்படி நடவடிக்கை எடுத்தபோது அதை அமெச்சூர்த்தனமானது என்று 'இந்து' கண்டித்த செய்தி வெளியிட்டுள்ளது!

பொலீஸாரின் நடவடிக்கையை இந்தியப்பத்திரிகைகள் கண்டிப்பதை நிறுத்தவேண்டும்"– இப்படிதிரு. மோஹன்தாஸ் தெரிவித்துள்ளார். (இ-ஐ-எ)

## தரவை அம்மனுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 29லட்சம்

அம்பாறை, டிச. 30 பொலீஸ் தாக்குதலில் சேதம் அடைந்த கல்முனை தரவை அம்மன் கோயிலுக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 29 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.

ஆலயத் தர்மகர்த்தாக்கள் கொழும்பு சென்று அமைச்சர் இராசதுரையைச் சந்தித்து ஆலயப்புனருத்தாரணம் பற்றிப் பேச ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ, க. வேல்முருகு இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறார்.

சரித்திரப் புகழ் வாய்ந்த இந்து ஆலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி திரு. வேல்முருகு இந்துமாமன்றத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமி, டாக்டர் நீலன் திருச்செல்வம் ஆகியோருக்கு அறிவித்திருக்கிறார். (இ-எ-14)

## "சக்கரின்" சேர்க்கத் தடை!

கொழும்பு, டிச 30 குளிர்பானங்களில் "சக்கரின்" அல்லதுவேறு செயற்கை இனிப்புக்களைச் சேர்ப்பதை சுகாதார அமைச்சு தடை செய்ய உள்ளது.

இதற்கு வழி செய்யுமுகமாகஉணவுசட்டவிதிகள் திருத்தப்படவுள்ளன.

மூன்று மாதகால முன் அறிவித்தலுடன் இத் திருத்தங்கள் நடைமுறைப்படுத் தப்படும் என்றுசுகாதார அமைச்சு விடுத்தபத்திரிகைக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

## யாழ் ஆஸ்பத்திரி கரோல்

யாழ்ப்பாணம்,டிச.30 யாழ் ஆஸ்பத்திரி கரோல் பாடகர் குழுவினர் நேற்று சகல வார்ட்டுகளுக்கும், விடுதிகளுக்கும் சென்று "கரோல்" நிகழ்ச்சிகளை நடத்தினர்.

முற்றிலும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் கலந்து கொண்ட இந்தக் "கரோல்" நிகழ்ச்சியில் மத வேறுபாடின்றி பல ஊழியர்கள் கலந்து சிறப்பித்தார்கள். (இ-10)

## ஆஞ்சநேய ஜயந்தி உற்சவம்

யாழ்ப்பாணம்,டிச.30 வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று செவ்வாய் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி ஜயந்தி உற்சவம் நடைபெறும்.

காலை 9 00 மணிக்கு விசேட அபிஷேகமும் ஆராதனையும் மாலை 5 00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் உற்சவமும் இடம்பெறும் (இ-எ)

## அநதிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் தெரியவருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அகதிகளை ஏற்றிவருவதற்கென விசேஷ பாஸ் வழங்கப்பட்ட வள்ளங்கள் இலங்கை அரசினால் அனுப்பிவைக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடற்படையினர் கைப்பற்றியவை அவற்றுட் சிலவா என்பது நிச்சயமாகத்தெரியவில்லை. (இ-10)

## கூழாங்குளம்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பேரைத் தம்முடன்முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் மனைவிமார் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர்ஈ. எஸ். இராசசிங்கத்திடம் முறையீடு செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு.

கே. மகாலிங்கம் (41 வயது), என். சிவபாதசுந்தரம் (57 வயது), சே இராசதுரை (52 வயது ஏ. செல்வஜோதி (45 வயது) கே. தர்மலிங்கம் (39 வயது). கைதுசெய்யப்பட்டவர்களாவர். (இ-10(

## பரந்தனில் கடும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன

சுமார் ஏழுமணி நேரமாக இருதரப்பினரிடையே இக்கடும் சமர் நடைபெற்றது

இதனிடையே ஹெலிக்கொப்டரில் இருந்தும் சீ. பிளேனில் இருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**பின்வாங்கினர்**

புலிகளின் சரமாரியான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத சிப்பாய்கள் பெரும் இழப்புகளுடன் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

தம்மில் ஒவ்வொருவரும் பலியாகக் கூட்டி வந்த பொதுமக்களில் அறுவரை சுட்டுக்கொன்றனர் என்று தெரியவருகிறது.

இதே வேளை சிப்பாய்களினால் விட்டுச் செல்லப்பட்ட பல பொருட்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

**ஷெல் தாக்குதல்**

முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் பரந்தனை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

பரந்தன் கமநல சேவை யோகத்தர் பிரிவுக் கட்டடப் பகுதிக்குள் இரு குண்டுகள் விழுந்து வெடித்ததன் காரணமாக அங்கு கட்டட வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

மேலும் பலர் காயம் அடைந்தனர்

மற்றொரு ஷெல் ஒன்று அப்பகுதியில் உள்ள ரான்ஸ்போமரில் விழுந்து வெடித்ததன் காரணமாக ரான்ஸ்போமரும் வெடித்துப் பிளந்தது. மின்சார வயர்கள் அறுந்து விழுந்ததன் காரணமாக மேலும் பொது மக்களில் இரண்டொருவர் அங்கு மரணமாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இத் தாக்குதல்களை அடுத்து இப்பகுதி மக்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

ஷெல் தாக்குதலினால் காயமடைந்த உடுவிலைச் சேர்ந்த மாணிக்கம் பத்மநாதன் (35 வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புலிகளின் தாக்குதலினால் காயமடைந்த ஆறு சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். (அ-10)

## மொறிசியஸில் கோவில்களுக்கு அரசு மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம்,டிச 30 மொறிசியஸில் கோவில்களுக்கு அரசு மாதாந்த உதவிப்பணம் வழங்குகிறது.

பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் பாலசுப்பிரமணிய சர்மா இவ்வாறு கூறினார்.

மொறிசியஸ் தீவுகளில் இந்து சமயம் எனும் பொருள்பற்றி பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை அவரது கருத்துரைகளுக்கான ஒழுங்குகளை செய்திருந்தது.

அவர் மேலும் பேசுகையில் மொறிசியஸில் ஹிந்தி பேசுவோர் சிவனையும், தெலுங்கு பேசுவோர் மகாவிஷ்ணுவையும், மராட்டி பேசுவோர் பிள்ளையாரையும் தமிழ் பேசுவோர் முருகனையும் சக்தியையும் வழிபடுகின்றனர்,

அங்குள்ள மக்களில் 52 சத வீதமானவர்கள் இந்துக்கள் இவர்களுக்கென 125 இந்துக் கோவில்கள் உண்டு.

ஒரு கோவிலுக்கு 250 ரூபா வீதம் அரசு உதவி அளிக்கிறது.

அங்கே தீ மிதிப்பின் போது 50 பேர் ஒரேநேரத்தில் தீ மிதிக்கின்றனர்.

அணைந்து போகும் தீயை பெரும் காற்றாடிகளின் உதவியால் மீண்டும் பற்றவைக்கின்றனர்.

தீ மிதிப்பு முடிந்ததும் பக்தர்கள் தணல்களை கைகளால் அள்ளி வீடு கொண்டு சென்று பத்திரப்படுத்தி வைக்கின்றனர். அவர்களது கைகளில் எதுவித நெருப்புச் சுட்ட காயமும் காணப்படுவதில்லை

தைப்பூசம், தமிழ் வருடப்பிறப்பு அரச விடுமுறைகளாக அங்கே பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன,

மொறிசியஸில் இந்துக்கள் புரட்டாதி மாதத்தில் கோவிந்தன் விழா கொண்டாடுகின்றனர்.

அப்போது ஒருமாதம் முழுவதும் விரதம் இருந்து புகைப் பதையும் மதுபானம் அருந்துவதையும் தவிர்ப்பர்.

தொலைக் காட்சிகளில் ஆபாசக் காட்சிகள் இடம்பெறலாம் என்பதால் அதைப் பார்ப்பதையும் சிலர் தவிர்த்துக்கொள்வர்.

சனிக்கிழமைகளில் கிருஷ்ணருக்கு வடைமாலை சாத்துவர்.

மொறிசியஸ் தீவுகளில் உள்ள இந்துக்கள் காவடித் திருவிழாவின் போது படையல்களுடன் கோழி இறைச்சியையும் சேர்த்துப் படைக்கின்றனர்.

இவ்வாறு பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் பாலசுப்பிரமணிய சர்மா மொறிசியஸ் தீவுகளில் தாம் கண்ட அனுபவத்தைக் கூறினார். (இ-5)

## முஸ்லிம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எதிர்காலத்துடனும் பிணைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்களின் மூன்றில் ஒரு பங்கினர் முஸ்லிம்கள். அவர்களின் எதிர்காலம் கவனிக்க வேண்டும் இப்படி அமைச்சர் அத்துலத்முதலி சொன்னார். (இ-எ)


**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்

**O/L, 9, 8, 7, 6**

ஆரம்பம்: ஜனவரி 5

மாலை 2.30



**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்

**DAY CLASSES**

ஆரம்பம்: ஜனவரி 5

காலை 8-00 மணி



**பிரயாண ஒழுங்குகள்**

நோர்வே ★ கனடா
ஜேர்மனி ★ லண்டன்
சிங்கப்பூர் ★ சவூதிஅரேபியா

ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் பிரயாணம் மேற்கொள்வதற்கு நாடுங்கள்.

**TRI STAR TRAVELS**

No. 6, Model Market, Jaffna.
Telephone: 23831



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 30 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60, 80 தொலைபேசி. 24805, 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org